**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.6/19</u>**

2023-ம் ஆண்டு ஜுன் திங்கள் 06-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.பெருமாள், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பெருமாள், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.சோமசுந்தரம் |
| கிராமம் | - செய்யாறு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>06.06.2023</u>
**<u>வா.சா.1.</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

தாவாவை விளம்புகை பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா எ.அட்டவணை சொத்து என்னுடையது என்று கோரி விளம்புகை பரிகாரம் கேட்கிறேன். தாவா எ.அட்டவணை சொத்தை நான் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களை வா.சா.ஆ.1 ஆவணம்படி சோமசுந்தர செட்டியார் வகையறாவிடம் இருந்துதான் கிரையம் பெற்றேன். சோமசுந்தர செட்டியார் 25.09.1971ல் சின்ன குட்டி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் அந்த ஆவணத்தை பரிசீலனை செய்துதான் கிரையம் பெற்றேன். மேற்படி மூலகிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் கூறுவதுபோல் சோமசுந்தர செட்டியார் கிரையம் பெற்ற மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா எ.அட்டவணை சொத்தை கிரையம் பெற்றபோது பிரதிவாதி வீட்டை ஒரு ஐக்குபந்தியாக குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.1னுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் அளவுகள்படிதான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சோமசுந்தர செட்டியார் கிரையம் பெற்ற ஆவணத்தின் அளவுகளும் வா.சா.ஆ.1னுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி கிரையபத்திரத்தின் அளவுகளும் ஒன்றுதானா என்று சரிபார்த்துதான் கிரையம் பெற்றேன். சோமசுந்தர செட்டியார் கிரையம் பெற்ற ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

3) இவ்வழக்கின் பிரதிவாதி செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.224/18 தாக்கல் செய்த பின்புதான் நான் இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ன்படி தான் தாவா சொத்து கிரையம் பெற்றபோது அதில் கல் வீடுதான் இருந்தது. பிரதிவாதி நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அவரது இடத்தை கிரையம் பெற்றிருந்தார். எப்போது கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதி அவரது இடத்தில் 2 அடுக்கு மாடி வீடு கட்டியிருந்தார். தாவா எ.அட்டவணை சொத்தை நான் கிரையம் பெருவதற்கு முன்பு அளந்து பார்த்துதான் கிரையம் பெற்றேன். அப்போது பிரதிவாதி என் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்த விவரம் தெரியவரவில்லை.

4) எனது பிராதில் 4வது பத்தியில் தாவா எ.அட்டவணை சொத்து நான் கிரையம் பெற்றபோது ஆர்.சி.சி. கூரை போடப்பட்டு இருந்தது என்று நான் கூறியுள்ள விவரம் சரிதான். பிரதிவாதி தாவா சொத்து சோமசுந்தர செட்டியாரிடமிருந்து கிரையம் பெற முற்பட்டதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ள விவரம் எனது கிரையதாரர் சொல்லி

எனக்கு தெரியவந்தது. 10.07.2018 மற்றும் 10.09.2018 அன்று பிரதிவாதி காவல் நிலையத்தில் என்மீது புகார் அளித்திருந்தார். நான் மணல் திருடியதாக புகார் அளித்திருந்தார் அதன்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு அந்த புகாரினை திரும்ப பெற்றுக்கொண்டார். நான் சொல்வது பொய் என்றும், பிரதிவாதிக்கு சொந்தமான சுற்று சுவரை நான் இடிக்க முற்பட்டதால்தான் புகார் அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5) நான் மேற்படி புகாரின்மீது சுற்றுசுவரை இடிக்கவில்லை என்று காவல் நிலையத்தில் எழுதிகொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சம்பவம் எதுவும நடைபெறவில்லை. நான் வா.சா.ஆ.1ன்படி சொத்தை கிரையம் பெற்று 6 மாத காலத்தில் வீடு கட்ட ஆரம்பித்தேன். எனக்கும் பிரதிவாதிக்கும் பலமுறை பிரச்சனை ஏற்பட்டு பஞ்சாயத்து நடந்து பிரதிவாதி அந்த பஞ்சாயத்திற்கு கட்டுப்படவில்லை என்றும் நான் எனது புகாரில் குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும் பிராது ஆவணங்கள் பட்டியலில் 4-வதாக தாக்கல் செய்துள்ள ஆவணம் காவல் நிலையத்தில் என்னால் எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம்தான். நான் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகாரிலும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிராதிலும் அளவுகள் மாறுபட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள அளவுகள்தான் சரியான அளவுகள்.

6) 10.07.2018 அன்று பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக கூறி புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தை நான் அத்துமீறி பிரவேசித்து ஆக்கிரமிப்பதாக கூறிதான் புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அது உண்மைக்கு புறம்பானது. நான் பிரதிவாதி என்மீது மண் கடத்திவிட்டதாக புகார் அளித்துள்ளதாக கூறுவது முற்றிலும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. எனது முன் கிரையதாரர் கிரையம் பெற்ற

மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் சில உண்மைகள் தெரியவந்துவிடும் என்ற காரணத்தால்தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா. சா.ஆ.1 முன்னிலைக்கு தாவா எ.அட்டவனை சொத்தை கிரையம் பெற்றபோதே என்னுடைய கிரைய தாரர் சோமசுந்தர செட்டியார் வகையறா தெளிவாக சுற்றுச்சுவரின் அளவுகள் குறித்து இணைப்பு -1அ-வின்படி குறிப்பிட்டுதான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

7) கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விவரத்தின்படி நான் சுற்றுச்சுவரை அளந்துதான் கிரையம் பெற்றேன். சோமசுந்தர செட்டியார் காலி மனையாகதான் கிரையம் பெற்றிருந்தார். 1971ல் கிரையம் பெற்றார். அவர் கிரையம் பெற்று 43 வருடங்கள் பழைய வீடு இருந்தது என்று எனது கிரைய பத்திரத்தில் நான் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரிதான். நான் கிரையம் பெற்ற பின்பு வீடு கட்டியபோது சுற்றுச்சுவரை இடிக்காமல்தான் வீடு கட்டினேன். நான் சொத்தை கிரையம் பெற்றபோது சுற்றுச்சுவரின் அளவுகள் சரியாக உள்ளதா என்று சரி பார்த்துதான் கிரையம் பெற்றேன். பிராதில் எ.அட்டவனை சொத்தில் சுற்றுச்சுவர் குறித்து நான் குறிப்பிடவில்லை. ஆனால் சுற்றுச்சுவர் குறித்துதான் பிரச்சனை உள்ளது. நான் சொல்வதுபோல் பிரதிவாதி எனது சுற்றுச்சுவரை இடிக்கவில்லை என்றும், அவரது இடத்தில் உள்ள சுற்றுச்சுவர் உயரம் குறைவாக உள்ளதால் அதை இடித்துவிட்டு உயரப்படுத்தி கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அகலப்படுத்திதான் கட்டியுள்ளார்.

8) நான் தாவா தாக்கல் செய்த பின்புதான் வீடு கட்ட ஆரம்பித்தேனா என்றால் பத்திர பதிவு முடிந்து 2 மாதங்களில் வீடு கட்ட ஆரம்பித்தேன். 30.10.2018 அன்று பிரதிவாதியிடம் நஷ்டஈடு கோரி வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 30.10.2018 அன்று நான் அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு பிரதிவாதி கட்டிடம் எதுவும் எழுப்பக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த அறிவிப்பினை பிரதிவாதி என்மீது பொய்யான புகார்கள் அளித்ததால் நஷ்டஈடு கோரிதான் அனுப்பியுள்ளேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்த விவரங்களை நீதிமன்ற ஆணையரை விசாரித்தால்தான் முழுமையாக தெரியவரும் என்றால் நீதிமன்ற சான்றாவணத்தில் உள்ள விவரங்கள் குறித்து வழக்கறிஞர் ஆணையர் சொத்தை பார்வையிட்டு அளந்தபோது நான் உடன் இருந்தேன். சொத்தின் மூல ஆவணங்கள் அனைத்தையும் வழக்கறிஞரிடம் காண்பித்தேன். வருவாய்துறை ஆவணங்களையும் வழக்கறிஞர் ஆணையரிடம் கொடுத்துள்ளேன். நான் நீதிமன்ற ஆணையரிடம் எப்.எம்.பி. உள்ளிட்ட வருவாய்துறை ஆவணங்களை வழக்கறிஞர் ஆணையரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த மேற்படி வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் வழக்கறிஞரின் ஆணையர் சொத்தை அளந்தாரா என்றால் அரசு வருவாய் துறையின் ஆவணங்களின் அடிப்படையில்தான் அளந்தார்.

9) நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்த பின்புதான் தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதற்கு முன்பாகவே எனக்கு பிரதிவாதி சொத்து ஆக்கிரமிப்பு செய்துள்ள விவரம் தெரியவந்தது. வழக்கு தாக்கல் செய்தபோது தெரிய வந்தது. நான் இத்தாவாவில் செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி என்மீது வழக்கு தாக்கல் செய்திருந்த விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. சார்பு நீதிமன்றத்தில் நான் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்திக்கொண்டிருக்கிறேன். நான் தாவா எ-அட்டவணை சொத்தில் எவ்வளவு சதுர அடி கிரையம் பெற்றுள்ளேன் என்ற விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் கிரைய ஆவணத்தை குறிப்பிட்டுதான் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்ற சதுர அடிகள் குறித்த

விவரம் குறித்து தாவாவில் குறிப்பிடாமல் பிரதிவாதி கிரையம் பெற்ற விவரத்தை குறிப்பிட்டு அவர் கூடுதலாக கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் 9 மற்றும் 10-வது பத்தியில் நான் பிரதிவாதியின் இடத்தின் அளவுகள் மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய இடத்தில் அளவுகள் கிரைய பத்திரத்தின்படியும் எனது மூல பத்திரத்தின்படியும் குறித்தும் பிரதிவாதி கிரைய பத்திரத்தில் உள்ள அளவுகள் குறித்தும் குறிப்பிட்டுதான் சொல்லியுள்ளேன்.

10) நான் கிரையம் பெற்றபோது பிரதிவாதி அவரது சொத்தில் சுற்றுச்சுவர் எழுப்பியிருந்தாரா என்றால் எனது இடத்தின் பக்கம் சுற்றுச்சுவர் எதுவும் பிரதிவாதி இடத்தில் இல்லை. நான் கிரையம் பெற்றபோது எனது இடத்தில் சுற்றுச்சுவர் இருந்தது.

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.